1980 பிப்ரவரி 5] [திரு. செ. சிவசாமி]

ரணமாக, தொழிலைப் பொறுத்த வரையில் நல்லதொரு கண்ணோட்டம் இல்லாததன் காரணமாக, தொழிலாளர்களிடையே, மிகப் பெரிய ஒரு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும். உதாரணத்திற்கு, இன்னொன்றும் சொல்கிறேன். கமுதக்குடியில் என். டி. சி. மில்லில் கிட்டத்தட்ட 300 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். அது கடந்த 32 நாட்களாக பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணமும் இல்லை. தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் எந்த விதமான பிரச்னையும் இல்லை. ஆனாலும், 32 நாட்களாக பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலை இனி ஏற்படாது.

போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால், கிராமாந்திரப் பகுதிகளில் இன்னும் சரியாக பஸ்கள் செயல்படவில்லை. ஒரு சில பகுதிகளில்தான் பஸ்கள் செயல்படுகின்றன. அதுவும் சரியாகச் செயல்படுவதில்லை. ஒருமுறை பார்த்தால் 8 பஸ்கள் ஓடும்; மறுநாள் பார்த்தால் 2 பஸ்கள்தான் ஓடும். இன்னும் சில இடங்களில் ரூட் மாற்றி விடப்பட்டிருக்கும். இன்னும் சில இடங்களில் ரிப்பேர் செய்யப்படாமல், நின்றுகொண்டிருக்கும். எல்லா ரூட்டுகளிலும் பஸ்கள் சரிவர ஓடுவதற்கான முறையிலே சாலைகள் சரிவர இல்லை; அவைகள் செப்பனிடப் படவில்லை. அந்த ரோடுகளை எல்லாம் செப்பனிட வேண்டுமென்று எடுத்துச் சொன்னபோது தமிழக அரசாங்கம் 120 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் போட்டிருக்கிறது. அதன் மூலம் கிராமாந்திரப் பகுதிகளில் நல்லதொரு ரோடு வசதிகள் செய்து கொடுப்போம் என்று போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றைய வரைக்கும் அந்த நிலைமை உருவாகவில்லை. கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் இல்லாததன் காரணமாக, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடி விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் தேதியிடப்பெற்ற 2199 ஆம் எண் அரசாணையில் வெளி

யான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

58. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாள் தேதியிடப் பெற்ற 2670 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

††59. தமிழ்நாட்டில் நிரந்தரமாகக் குடியிருந்து வருவோர்க்கு மது அருந்த அனுமதிச் சீட்டுக்கள் வழங்க ஆட்சியருக்கு அதிகாரமளிக்கும் வகையில் தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மது (உரிமம்—அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள் (மதுவிலக்கு—ஆயம் IV) துறையின் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ம் நாள் தேதியிடப்பெற்ற 265 ஆம் எண் அரசாணையில் வெளியானஅறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*11. உடுக்குறியிடாத வினா-விடை பட்டியல் (1 முதல் 200 வரை).

*2—2—1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

††4—2—1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.